# <u>விருதுநகர் நகராட்சி</u>

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048-ம் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 -ம் நாள் 2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **30.09.2022** -ம் தேதி வெள்ளி கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகளை பராமரிப்பு பணியினை கடந்த 01-08-2018 முதல் சாமுராய் இண்டஸ்ட்ரீஸ் எலக்ட்ரிக்கல் திருநெல்வேலி என்ற நிறுவனம் செய்து வருகின்றது. கடந்த மே 2022 முதல் போதிய பணியாளர்களைக்கொண்டு பராமரிப்பு பணியை செய்யாமலும், பராமரிப்பு பணிக்கு தேவையான மின் பொருட்கள் இருப்பில் வைத்துக்கொள்ளாமலும் பணி செய்யாத காரணத்தினாலும் நகர்மன்ற கூட்டங்களில் நகர்மன்ற உறுப்பினர்களின் புகார்கள் வரப்பட்டவண்ணம் உள்ளது, பொது மக்கள் மற்றும் காவல்துறையின் மூலம் புகார்கள் வந்து உள்ளது இவர் முறையாக பணிகள் நடை பெறாத காரணத்தினால் நகர்மன்றம் மற்றும் அரசுக்கும் அவப்பெயர் ஏற்படும் வண்ணம் உள்ளது மேற்படி நிறுவனத்தின் மீது வரப்பட்ட புகார்களின் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து விட்டு இப்பணியினை அதே விலை விகிதத்தில் வேலை செய்ய முன்வரும் நிறுவனங்கள் முன்னுரிமை அடிப்படையில் பணி செய்ய அனுமதிக்கலாம். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண்:E2/475/2018

**தீர்மானம் எண்.**171: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 2**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட கல்லூரி சாலையில் உள்ள நகராட்சி பொறியாளர் அவர்களின் குடியிருப்பில் மராமத்து பணிகள் 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,40,000/- க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9112-2/2022

**தீர்மானம் எண்.172:**அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 3**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.7 ல் எ.டி.பி.காம்பவுண்ட் பகுதியில் உள்ள மூன்று சிறு பாலங்கள் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூராக இருப்பதால் அதை சீரமைத்து கட்ட அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் அப்பகுதி வாழ் பொதுமக்கள் கோரியதின் அடிப்படையில் சிறுபாலங்களை சீரமைக்கும் பணிக்கு 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.55 இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/3057/2022

**தீர்மானம் எண்.173:** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 4**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.19ல் கீழக்கடை தெருவில் உள்ள வாறுகால், சிறுபாலங்களில் சேதமடைந்து உள்ளது. இதனை சீர் செய்து தருமாறு வார்டு உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர்கள் அதன் படி பணிகள் 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.03 இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9112/2022

**தீர்மானம் எண்.174::** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 5**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.19ல் பஜார் தெருவில் மார்க்கட்டு பகுதியில் செல்லும் வாறுகால், சிறுபாலம் மிகவும் சேதமடைந்துள்ளது. இதனை சீர் செய்து தருமாறு வார்டு உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர்கள் அதன் படி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.55,000/- மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/2279/2022.

**தீர்மானம் எண்.175::** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 6**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27 பழைய அருப்புக்கோட்டை சாலையில் உள்ள திருப்புகழ் கோவில் அருகில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சேதமடைந்து சாலையில் தேங்கி பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தி இருப்பதால் சேதமடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சீர் செய்ய 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.46,000/- மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/2295/2022

**தீர்மானம் எண்.**176:: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 7**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.25 தெற்கு ரத வீதியில் உள்ள சங்கிலி கருப்பசாமி கோவில் அருகில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சேதமடைந்து சாலையில் தேங்கி பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இருப்பதால் சேதமடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சீர் செய்ய 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.40,000/- மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/2278/2022

**தீர்மானம் எண்.**177:: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 8**

விருதுநகர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சி பொது சுகாதார அலுவலகம் பிரிவு- I இயங்கி வருகிறது. மேற்படி சுகாதார அலுவலகத்தின் தரைதளம் மிகவும் தாழ்வாக இருப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் உள்ளே புகுந்து அலுவலகத்தில் பணியாற்ற முடியாத சூழ்நிலை இருப்பதாகவும், மேற்கூரையில் பூச்சு ஆங்காங்கே பெயர்ந்து தலை மீது விழுவதாகவும், மேற்படி சுகாதார மண்டலத்தின் சுகாதார ஆய்வாளர் மற்றும் பணியாளர்கள் தெரிவித்ததின் பேரில் மேற்படி இடம் நேரில் பார்வையிடப்பட்டது. மேற்படி சுகாதார வளாகத்தில் தரைதளத்தை உயர்த்தவும் அதற்கேற்றாற்போல முன்பக்க நுழைவு வாயிலின் கதவுகளில் உயரத்தை கூட்டவும் மேற்கூரையை பூச்சு செய்யவும், இதர மின் சாதன தொடர்பான பணிகளை செய்யவும் 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.65,000/- மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/2271/2022**தீர்மானம் எண்.**178:: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 9**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 ல் கல்பள்ளிவாசல் தெரு பகுதியில் உள்ள இரண்டு சிறுபாலங்கள் சேதமடைந்த சிலையிலும் மற்றும் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைக் காலங்களில் கழிவு நீர் வெள்ளம் போல் பெருகெடுத்து ஓடுவதால் பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு மற்றும் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது மேலும் அப்பகுதி சாலை பள்ளமாக உள்ளதால் அதனை சீரமைத்து கட்டி தரவேண்டி அப்பகுதி நகர் மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் பணிகளை செய்ய 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.79 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/2517/2022

**தீர்மானம் எண்.179::** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 10**

விருதுநகர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய பொறியியல் பிரிவில் இயங்கி வந்த கீழ் தளம் வடக்குப்பகுதியில் உள்ள அறை மற்றும் வடமேற்கு திசையில் இருக்கும் பொறியாளர் அறையில் சுவர், தரை மற்றும் மின்கம்பிகள் சேதாரமாக உள்ளது. மேலும் பொது சுகாதார பிரிவிற்கு இரண்டு அறைகள் மற்றும் போதுமான கழிவறை வசதி தேவைப்படுகிறது. ஆகையால் பழைய பொறியாளர் அறையை மராமத்து பணி செய்வதற்காக 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.70 இலட்சம் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9651/2022

**தீர்மானம் எண்.180::** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 11**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 16 பாவாலி ரோடு அகமது நகரில் உள்ள சமுதாயக்கூடம் பல வருடங்களாக பயன்பாடு இல்லாமலும், பொதுமக்கள் யாரும் சுப நிகழ்ச்சிகள் ஏதும் நடத்திட முன் வராத காரணத்தினாலும், நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், மாத வாடகைக்கு விடக்கோரி மனு வந்துள்ள காரணத்தினாலும் அகமது நகர் சமுதாயக்கூடத்தினை பொது ஏலத்தின் மூலம் வாடகைக்கு விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:அ4/5029/2022

**தீர்மானம் எண்.181:** ரத்து செய்யப்பட்டது

## பொருள் : 12

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட கல்லூாரி சாலையில் உள்ள வி.என்.பி.ஆர் பூங்காவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்யும் போது பூங்காவின் கழிவுகள் முழுவதும் சுத்தம் செய்தல் மற்றும் வர்ண ஓவியங்களால் அலங்கரிக்க அறிவுரித்தியதின் பேரில் நகராட்சி ஆணையாளர் மேற்படி பூங்கா முழுவதும் வர்ணம் மற்றும் ஓவியம் வரையும் பணிக்கு 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.60,000/- க்கு மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/2110/20022

**தீர்மானம் எண்.182:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 13

விருதுநகர் நகராட்சியின் 36 வார்டு பகுதிகளிலும் திடக் கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் தொற்று நோய் தடுப்பு பணி மேற்கொள்ள தேவையான பொருட்கள் பிளிச்சிங்பவுடர் 5000 ம் கிலோ மற்றும் சுண்ணாம்பு பவுடர் 10,000ம் கிலோ கொள்முதல் செய்யும் பணிக்கென தோராயமாக தொகை ரூ.2,90,000/– ( இரண்டு இலட்சத்து தொன்னுரு ஆயிரம் மட்டும்) பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

எச்1/9867/2022

**தீர்மானம் எண்.183:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 14

விருதுநகர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு துாய்மைப் பணியாளர்களுக்கு பணி மேற்கொள்ள தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கம்பூட்ஸ் (42 செட்) கையுறை (750 செட்) ஒளிரும் சட்டை (65 எண்ணம்) கொள்முதல் செய்யும் பணிக்கென தோராயமாக தொகை ரூ.1,26,050/– ( ஒரு இலட்சத்து இருபத்து ஆறு ஆயிரத்து ஐம்பது மட்டும்) பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி அனுமதிக்கலாம்.

எச்1/9866/2022

**தீர்மானம் எண்.184:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் :15

விருதுநகர் நகராட்சியின் பழைய பேருந்து நிலைய பொது சுகாதார வளாகங்கள், அலுவலக கட்டிட கழிப்பறைகள் சுகாதாரமாக பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவையான பொருட்கள் பினாயில் ஜெல்லி (1000 லிட்டர்) மற்றும் லெமன் கிரஸ் ஆயில் (100 லிட்டர் ) பொதுசுகாதார பயன்பட்டிற்கென பொருட்கள் கொள்முதல் செய்திட அதற்கான தோராயமாக தொகை ரூ 4,20,000/– (நான்கு லட்சத்து இருபது ஆயிரம் ) மட்டும் பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி அனுமதிக்கலாம்

எச்1/9868/2022.

**தீர்மானம் எண்.185:** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 16**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 21ல் நீர்மாலை தெருவில் மேற்பகுதியில் உள்ள மழை நீர் வடிகால் சேதமடைந்து கழிவு நீர் சாலையில் தேங்குவதால் பொதுசுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் மழை நீர் வடிகால் இயங்கும் இடத்தில் உள்ள சிறுபாலம் சேதமடைந்ததால் அதனையும் மறுசீரமைக்கப்பட வேண்டியதுள்ளது. இது தொடர்பாக நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரியதின் பேரில், இடம் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட இடத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.45/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/1464-1/2022

**தீர்மானம் எண்.**186: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 17**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 24ல் பாத்திமா நகர் பிரதான சாலை,தெற்கு பகுதியில் குறுக்குசந்து, சத்தியா காம்ப்ளக்ஸ் ஆகிய பகுதிகளில் 3 அடிகுழாய்கள் பழுதடைந்து உள்ளன. மேற்படி அடிகுழாயில் நீரின் உப்பு தன்மை காரணமாக அடிகுழாயில் அரிப்பு மற்றும் துருபிடித்து விட்டதால் அடிகுழாய்களில் மின் மோட்டார் மற்றும் மின் விசைபம்புகள் அமைக்கும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/8553/2022

**தீர்மானம் எண்.**187: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 18**

விருதுநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 34ல் கல்லூரிச்சாலையில் கடைசி பகுதியில் வி.என்.வி.எஸ் தொழில்நுட்ப கல்லூரியில் இருந்து செந்தில்குமார் நாடார் கல்லூரி வரை உள்ள சாலை மிகவும் மோசமாக உள்ளதால் அதை புதுப்பித்துத் தருமாறு கல்லூரி நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்ததின் பேரில், மேற்படி சாலையை நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி சாலையில் ஆங்காங்கே உள்ள பள்ளங்களை தார்சாலை தார்களை கொண்டு சீர் செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.55/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/1594/2022

**தீர்மானம் எண்.**188: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 19**

விருதுநகர் நகராட்சியில் பணிபுரிந்து வரும் பொது சுகாதாரம் தூய்மை பணியாளர்கள், பொறியியல் குடிநீர் பிரிவு, பொது பிரிவு கடை நிலை பணியாளர்கள், ஒட்டுநர்கள் , துப்புரவு பணி

மேற்பார்வையாளர்கள் மற்றும் பெசிசி நகர்புற சுகாதார செவிலியர், ஆயா ஆண் மற்றும் பெண் நிரந்தரம் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகை முன்னிட்டு 2022ம் ஆண்டுக்குரிய சீருடைகள் தேவையானது விநியோகம் செய்திட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான (கோ ஆப் டெக்ஸ்) Tamilnadu Hand loom weavers cooperative society ltd மதுரை மூலம் வாங்கி கொள்வதற்கும், மேற்காண் பணிக்கான கொள்முதல் மற்றும் தையல் கூலி உட்பட தோராயமாக செலவினம் தொகை ரூ 2,00,000/– (இரண்டு இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
அவசர அவசியம் கருதி நகர் மன்றதலைவர் முன்அனுமதி பெறப்பட்டு மேற்காண் நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
கோப்பு எண். 10130/2022 /எச்1

**தீர்மானம் எண்.189:** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 20**

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் உள்ளபடி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் விருதுநகர் மாவட்டம் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களுக்கு பயன்படுத்தப்படும் Post 2006 M-2 Model மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு BEL -நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு 15-வருடங்கள் முடிவடைந்த நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அழிப்பதற்கான பணி 19.9.2022 முதல் 21.9.2022 நடைபெற உள்ளதால், விருதுநகர் நகராட்சிக்கு காணொளி (Videography) மூலம் பதிவு செய்யும் பணி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி, காணொளி பதிவு செய்யும் பணிக்கு அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.20,000/- மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண் :- 5175/2021/அ2

**தீர்மானம் எண்.190:** அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 21**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 5, கச்சேரி சாலை தெருவில் கதவு எண்கள் 149, 150 மற்றும் 152 கொண்ட வணிக கட்டிடங்கள் திரு. A.V.T. கணேசன் என்ற பெயரில் உள்ளது. மேற்கண்ட கட்டிடங்களுக்கு 1993-1994 ம் ஆண்டு முதல் ரூ1,47,030/- நிலுவையாக உள்ளதால் கடைகள் பூட்டப்பட்டதனை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.A.V.T. கணேசன் என்பவரால் வழக்கு எண் WP(MD) 20944/2022 தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு. K.P.கிருஷ்ணதாஸ் வழக்கறிஞர் அவர்களை ஆஜராகி பதில் வாதுரை தாக்கல் செய்திட உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படியாருக்கு வழக்கு நடத்தும் கட்டணம் ரூ.9500/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்: 9978/2022/அ2

**தீர்மானம் எண்.**191: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 22**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 1 ஆயம்மாள் நகரில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் கதவுகள், குடிநீர் குழாய்கள் மற்றும் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதை சீர்செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.50/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9180/2022

**தீர்மானம் எண்.**192: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 23**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 21இல் குமரன் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சேதமடைந்துள்ளதை மறுசீர்செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.60/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9710/2022

**தீர்மானம் எண்.**193: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 24**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 31 மாத்தநாயக்கன்பட்டி சாலையில் நகராட்சிக்கு சொந்தமான பாதாளசாக்கடை கழிவு நீரேற்றும் நிலையம் உள்ளது. மேற்குறிப்பிட்ட கழிவு நீரேற்றும் நிலையத்திற்கு செல்லும் முன் உள்ள சிறுபாலத்தில் கம்பி கட்டிய மூடுகல் சேதமடைந்துள்ளதை சீர்செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9711/2022

**தீர்மானம் எண்.**194: அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 25**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 30 ஓடைத்தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பக்கவாட்டு சுவர் சேதமடைந்துள்ளதை புதியதாக அமைக்கும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.37,000 (முப்பத்தேழு ஆயிரம் மட்டும்) மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:இ1/9709/2022

**தீர்மானம் எண்.195**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 26

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 2 மதுரை சாலை தீயணைப்பு துறை அலுவலகத்திற்க்கு அருகில் பாதாளசாக்கடை கழிவு நீர் செல்லும் பிரதான குழாய்கள் உடைப்பு ஏற்பட்டுள்ளது, எனவே உடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்களை புதியதாக மாற்றும் பணி 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.30/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பாதாள சாக்கடை பணியாக இருப்பதால் அவசரம் அவசியம் கருதி நகர் மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9707/2022

**தீர்மானம் எண்.196**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 27

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 31 மற்றும் வார்டு எண் 15, மாத்தநாயக்கன்பட்டி சாலை காளிதாஸ் மருத்துவமனை அருகில் மற்றும் மல்லாங்கிணறு சாலை பம்பிங் ஸ்டேசன் அருகிலும் பாதாளசாக்கடை கழிவு நீர் செல்லும் குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு, கழிவு நீர் சாலையில் வழிந்தோடுகிறது, எனவே உடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்களை புதியதாக மாற்றும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.20/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பாதாள சாக்கடை பணியாக இருப்பதால் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9706/2022

**தீர்மானம் எண்.197**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 28

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட அல்லம்பட்டி சாலை (அருப்புக்கோட்டை சாலை சந்திப்பிலிருந்து சாத்தூர் சாலை சந்திப்பு வரை)யிலிருந்து காமராஜர் பைபாஸ் சாலை வரை 14 இடங்களில் ஆங்காங்கே சாலையில் பள்ளங்கள் உருவாகி மழைகாலங்களில் குட்டை போல தண்ணீர் தேங்கி, போக்குவரத்திற்கு இடையூரும் விபத்து ஏற்படும் வகையிலும் இருப்பதால் ஆங்காங்கே சாலையில் உள்ள பள்ளங்களை PATCH WORK (பேட்ச் ஒர்க்) மூலம் சீர்செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.25/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:இ1/9705/2022

**தீர்மானம் எண்.198:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 29

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 36 இல் கல்லூாரி சாலையில் நகராட்சி அலுவலர்கள் குடியிருப்பு எண்.2 இல் குடிநீர் குழாய் மற்றும் கழிவு நீர் குழாய்கள் சேதமடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதை சீர்செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.30/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/1675/2022

**தீர்மானம் எண்.199:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 30

இந்நகராட்சி பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட 2021-2022 ஆம் நிதியாண்டின் வருமான வரி மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி தொகை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதனை வருமான வரிக்கணக்கிலும் சரக்கு மற்றும் சேவை வரிக்கணக்கிலும் தாக்கல் செய்ததர்க்கு உண்டான தொகை ரூ. 10,000/- னை திரு. B.HELEN, ALTRUST CUSTOMER MANAGEMENT INDIA PVT LTDஅவர்களுக்கும் ரூ. 10,000/- னை திரு.சார்லஸ் அவர்களுக்கும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** _மன்றம் அனுமதிக்கலாம்
கோப்பு எண் : 7057/2021/B1

**தீர்மானம் எண்.200:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 31

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 36இல் கல்லூாரி சாலை நகராட்சிக்கு செந்தமான தங்கமாள் பெரியசாமி பெண்கள் உயர் நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளி முன்புறம் உள்ள சுற்று சுவர் சேதமடைந்து உள்ளது அதனை மறு சீர் அமைக்கும் பணி 2022-2023ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.43/-இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9704/2022

**தீர்மானம் எண்.201:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 32

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 25 -ல் க்ஷத்திரிய பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள சுழிப்பறையை இடித்துவிட்டு ரேசன் கடை கட்டும் பணி குறித்த அறிக்கையை விளம்பரம் செய்தமைக்கு விளம்பரம் கட்டணம் தொகையினை கீழ்கண்டவாறு வழங்கலாம்.

1. Express Publications (Madurai) Pvt Ltd - தொகை ரூ. 15,271/-

மேற்கண்ட விளம்பரம் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/1139-6/2022

**தீர்மானம் எண்.202:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 33

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட ஆனைக்குட்டம் மற்றும் தாமிரபரணி நீர்ரேற்று நிலையங்களில் இருந்து இந்நகருக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மற்றும் ஆனைக்குட்டம் குடிநீரை மதுரை ரோடு சம்ப்பிலும், CWSS தாமிரபரணி கூட்டு குடிநீரை கல்லூாரி சாலையில் உள்ள VNPR பார்க் சம்ப்பிலும் ஏற்றப்பட்டு வருகிறது. 15 CFC UNTIED GRANT 2021-2022 நிதி மூலம் புதிதாக LIQUIED CLORINE GAS PLANT, மேற்கண்ட 2 சம்ப்புகளிலும் பொருத்தப்பட்டு நகர் முழுவதும் 36 வார்டுகளிலும் நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது, மேலும் இனி வரும் காலங்களில் தேவைப்படும் LIQUIED CLORINE GAS வாங்குவதற்கும், மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் 2022-2023ம் ஆண்டின் கீழ் ரூ.5,00,000/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.46 நாள்.31.05.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 05.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சபரி இன்ஞ்னியரிங்,17 A.G.D. இரண்டாவது தெரு ஆவடி சென்னை 600054. செல்: 9791010990 | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.58 சதவிகிதம் குறைவு. |
| 2. | ஸ்ரீ ராஜ கணபதி இன்ஞ்னியரிங் ஒர்க்ஸ் எண்.30, பல்லவன் தெரு விவேகானந்தர் நகர் ஆவடி சென்னை 600054 செல்.9841933990 | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.58 சதவிகிதம் அதிகம். |

**அலுவலக குறிப்பு :** மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.58% குறைவாக அளித்துள்ள ஸ்ரீ சபரி இன்ஞ்னியரிங்,17 A.G.D. இரண்டாவது தெரு ஆவடி சென்னை 600054. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ2/1596/2022

**தீர்மானம் எண்.203:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் : 34

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான பாதாளசாக்கடை திட்டம் STP ல் கழிவு நீர் சரியாக சுத்திகரிக்கப்படாமல் கௌவுசிகா மகாநதி ஆற்றில் கலக்கிறது என்று பொது பணித்துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் மூலமும் தெரிவிக்கப்பட்டு வருகிறது ஆதலால் STP ல் இயங்காத மின் மோட்டார்கள், AIR DIFFUSER புளோயர் கம்பரசர், UPVC பைப் லைன்கள் குளோரின் யூனிட்,REFERIGERATOR, COD APPARATUS AND CHEMICAL MATERIALS. போன்ற பராமரிப்பு பொருட்கள் பாதாளசாக்கடை சுத்திகரிப்பு பணிக்கு அவசியம் தேவைப்படுகிறது. நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் 06.04.2022 தேதிய நேரடி ஆய்வின் படியும் மேற்கண்ட பராமரிப்பு பொருட்களை வாங்கி STP யில் பொருத்தி சரிசெய்வதற்கும், மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் 2022-2023ம் ஆண்டின் கீழ் ரூ.6,60,000/- இலட்சம் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.43 நாள்.31.05.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 05.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | கனெக்டான் பிரைவேட் லிமிடெட்<br>சென்னை 600002 | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.19 சதவிகிதம் குறைவு. |
| 2. | A TO Z எண்டர்பிரைசஸ்<br>சென்னை 6000091 | மதிப்பீட்டைக் காட்டிலும் 1.53 சதவிகிதம் அதிகம். |

**அலுவலக குறிப்பு :** மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.19% குறைவாக அளித்துள்ள கனெக்டான் பிரைவேட் லிமிடெட் சென்னை. 600002 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
இ2/2564/2022

**தீர்மானம் எண்.204**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :35

விருதுநகர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் (URBAN-2.0)ன் கீழ் விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட மாத்தநாயக்கன்பட்டி உரக்கிடங்கில் உயிர் உரம் தயாரிக்கும் (BIO-MINING) பணிக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.137.60 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான நிதியினை தூய்மை இந்தியா திட்டம் URBAN-2.0-ன் கீழ் மத்திய அரசின் பங்களிப்பு 50 சதவீகிதம் தொகை ரூ68.80/- இலட்சம், தமிழக அரசு பங்களிப்பு 33 சதவீகிதம் தொகை ரூ.45.408/- இலட்சம் மற்றும் விருதுநகர் நகராட்சியின் பங்களிப்பு 17 சதவீகிதம் தொகை ரூ.23.392/- இலட்சம் பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள, இந்நகர் மன்றத் தீர்மான எண்.120 நாள்.14.07.2022ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 23.08.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டன. வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் பீரிஸ் இன்ஃபராடெக், 6/540-5 மல்லிகை தெரு , பெத்தனாச்சி நகர், விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவிகிதம் குறைவு. |

அலுவலக குறிப்பு :

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.04% குறைவாக அளித்துள்ளார் திருவாளர் பீரிஸ் இன்ஃபராடெக் விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம். திட்ட பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ1/7314-1/2019

**தீர்மானம் எண்.205:** அனுமதிக்கப்பட்டது

நகர்மன்ற தலைவர்
விருதுநகர் நகராட்சி

# <u>விருதுநகர் நகராட்சி</u>

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048-ம் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 -ம் நாள் 2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **30.09.2022** -ம் தேதி வெள்ளி கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் அவசர கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் :1**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 14இல் ரோசல்பட்டி ரோடு தனுஷ்கோடி நாடார் ஆரம்பப்பள்ளியின் கழிப்பறை கட்டிடம் சேதமடைந்து, சீலிங் பூச்சுகள் பெயர்ந்து விழும் நிலையில் மற்றும் பல இடங்களில் விரிசல்கள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது, எனவே பழைய கழிப்பறை கட்டிடத்தை இடித்து புதிய கழிப்பறை கட்டும் பணி 2022-2023ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.4.50/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9718/2022

**தீர்மானம் எண்.206**: அனுமதிக்கப்பட்டது

**பொருள் :2**

விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் இரண்டு பிரதான கழிவு நீரேற்றும் நிலையங்களும் ஏழு கழிவு நீர் உந்து நிலையங்களும் உள்ளன. இவற்றில் புல்லலக்கோட்டை சாலை, வேலுச்சாமி நகர் மற்றும் பரங்கிநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள உறிஞ்சு கிணறுகள், வடி கிணறுகள் மற்றும் சேகரிக்கும் கிணறுகளில் அதிகமாக மண் படிந்து நீர் தேங்கி மின் மோட்டார்கள் இயங்கவில்லை. எனவே மேற்படி கிணறுகளில் உள்ள மண்களை அப்புறப்படுத்தவும், பழுது ஏற்பட்டுள்ள நீர் மூழ்கி மின் மோட்டார் பழுது பார்க்கும் பணி 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.2.35/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9717/2022

**தீர்மானம் எண்.207**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :3

விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் இரண்டு பிரதான கழிவு நீரேற்றும் நிலையங்களும் ஏழு கழிவு நீர் உந்து நிலையங்களும் உள்ளன. இவற்றில் மாத்துநாயக்கன்பட்டி சாலை, மல்லாங்கிணறு சாலை கழிவு நீரேற்று நிலையத்தில் உறிஞ்சு கிணறு, வடி கிணறு மற்றும் சேகரிக்கும் கிணறு ஆகிய கிணறுகளில் அதிகமான மண் படிந்துள்ளதால் அவற்றில் உள்ள நீர் மூழ்கி மின் மோட்டார்கள் பழுதடைந்துள்ளது. மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.2.80/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9716/2022

**தீர்மானம் எண்.208**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :4

விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் ஏழு கழிவு நீர் உந்து நிலையங்களும், இரண்டு கழிவு நீரேற்றும் நிலையங்களும் உள்ளன. இவற்றில் ஆத்துப்பாலம் நீரேற்று நிலையத்தில் உள்ள உறிஞ்சு கிணறு, வடி கிணறு மற்றும் சேகரிக்கும் கிணறு ஆகிய கிணறுகளில் உள்ள (கழிவு)மண் படிந்து மின் மோட்டார்களில் புகுந்துள்ளதால் 3 கிணறுகளில் உள்ள மண்களை அகற்றவும், பழுது ஏற்பட்ட மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.5.70/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9715/2022

**தீர்மானம் எண்.209**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :5

விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் 01.08.2019 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது நாள் வரையாக நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தில் 74.00 கி.மீ. நீலத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு 2999 பாதாள சாக்கடை இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே பாதாள சாக்கடை பிரதான குழாயில் மழைக்காலங்களில் பிரதான குழாயில் அடைப்பு மற்றும் மண் ஆங்காங்கே குழாயின் அடியில் தங்கி விடுவதால் கழிவுநீர் குழாய்கள் வழியாக செல்ல தடைப்பட்டு தரையின் மேல் கழிவுநீர் செல்கிறது. அதனால் பொது சுகாதாரத்திற்கு கேடு ஏற்படுகிறது. மேலும் பிரதான குழாயில் உள்ள அடைப்பு மற்றும் மண்களை அகற்றுவதற்கு நகராட்சியில் போதிய பணியாளர்கள்

இல்லை,எனவே ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் விருதுநகர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.A7/2019/18050, நாள்.01/10/2019, குறிப்பிடப்பட்டுள்ள விகிதப்படி தனியார் மூலம் பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் அல்லது சுயஉதவிக்குழு மூலம் பணியமர்த்தும் பணிக்கு 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.4.90/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9714/2022

**தீர்மானம் எண்.210**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :6

விருதுநகர் நகராட்சியில் புதியதாக கொள்முதல் செய்யப்பட்ட பொறியாளர் ஈப்பு வாகனம் TN 67 BP 1558 வருடாந்திர டீசல் செலவினத்தை 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள அதற்கான செலவினத் தொகை ரூ.3.00/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/1593/2022

**தீர்மானம் எண்.211**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :7

விருதுநகர் நகராட்சியில் புதியதாக கொள்முதல் செய்யப்பட்ட நகர்மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN 67 BP 1542 வருடாந்திர டீசல் செலவினத்தை 2022-2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினத் தொகை ரூ.1.80/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/1593/2022

**தீர்மானம் எண்.212**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :8

விருதுநகர் நகராட்சிக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் உரிமையியல் வழக்குகளை இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிடுவதற்கு திரு.D.முருகன், B.A,.B.L., வழக்கறிஞர் மற்றும்

குற்றவியல் வழக்குகளை நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிடுவதற்கு திரு.G.அரவிந்த், B.A,.B.L., வழக்கறிஞர் ஆகிய இருவரையும் நகராட்சி வழக்கறிஞர்களாக (Standing Council) நியமனம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.197/2022/சி1.

**தீர்மானம் எண்.213**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :9

விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் கழிவு நீரேற்று நிலையமான ஆத்துபாலம் கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள 50 எச்.பி. நீர் மூழ்கி மின் மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளது. மின் மோட்டார் பழுது பார்க்கும் பணி 2022-2023ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.47,000/- (ரூபாய் நாற்பத்து ஏழாயிரம் மட்டும்) மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/9713/2022

**தீர்மானம் எண்.214**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :10

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 30இல் உள்ள தங்கம்மாள் பெரியசாமி நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மாணவியர்களின் மிதிவண்டிகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு, தேவையான வசதிகள் செய்து கொடுக்கும் பணி 2022-2023ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.3.75/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9712/2022

**தீர்மானம் எண்.215**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :11

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 13ல் நகராட்சிக்கு சொந்தமான செந்தில்குமார் நடுநிலைப்பள்ளி உள்ள சமையள் அறை, ஆசிரியர்களுக்கான கழிப்பறை மற்றும் மோட்டார் அறை சேதமடைந்து உள்ளது அதற்கான மராமத்து பணி 2022-2023ம் கல்வி நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ76,000/- மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9719/2022

**தீர்மானம் எண்.216**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :12

விருதுநகர் நகராட்சியில் 2018-2019 ம் ஆண்டு பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்கும் பணியினை மேற்கொள்ள M/S. VVV Construction pvt ltd, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவினை 10.08.2022 அன்று இரத்து செய்ததை மறுபரிசீலனை செய்து, தொடர்ந்து பணியினை மேற்கொள்ள அனுமதி கோரி மேற்படி நிறுவனத்திடமிருந்து கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி M/S. VVV Construction pvt ltd, Chennai என்ற நிறுவனம் அளித்துள்ள கடிதத்தில் நிலுவையாக உள்ள பாதாள சாக்கடை இணைப்பு பணிகளை 6மாத காலத்திற்குள் முடித்து தருவதாக உறுதி அளித்துள்ளார்கள். எனவே M/S. VVV Construction pvt ltd, Chennai என்ற நிறுவனத்தின் கடிதத்தினை மறுபரிசீலனை செய்து, நகர்மன்ற தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட முன் அனுமதியினை இரத்து செய்யவும் மீண்டும் நகர்மன்ற தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அதனடிப்படையில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு இரத்து செய்த அறிவிப்பினை திரும்ப பெறுவதற்கும் (REVOKE), நிலுவையாக உள்ள பணியினை 6 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தொடர்ந்து பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ2/1221/2018

**தீர்மானம் எண்.217**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :13

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 16ல் சத்யமூர்த்தி சாலை திருவள்ளுவர் ரோடு சந்திப்பில் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிடம் 10 வருடங்களாக செயல்படாமல் உள்ளது கட்டிடத்தின் கதவுகள், பைப்புகள் சேதமடைந்து யாருக்கும் பயன்படாத நிலையில் உள்ளது.

கட்டிடத்தின் உள்ளே சமூக விரோதிகள் பயன்படுத்தி வருவதாக நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் புகார் தெரிவித்து உள்ளனர், கட்டிடத்தின் உள்ளே மரங்கள் செடிகள் வளர்ந்து இடிந்து விழும் தருவாயில் இருப்பதால் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையில் இருக்கிறது எனவே மேற்படி கட்டிடம் உபயோகம் அற்ற நிலையில் உள்ளதாலும் அவற்றை அப்புறபடுத்த வேண்டுமென பொது மக்களின் கோரிக்கை தொடர்ந்து வந்ததாலும். மேற்கண்ட சமுதாய கழிப்பிட கட்டிடத்தை பொது மக்கள் நலன் கருதி இடித்து அதனை அப்பறப்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:இ1/9720/2022

**தீர்மானம் எண்.218:** அனுமதிக்கப்பட்டது

## பொருள் :14

விருதுநகர் நகராட்சியில் பொது சுகாதாரம், கொரோனா தடுப்பு பணிக்கென, சிறப்பு மெகா தடுப்பு ஊசி முகாம் மூலம் பொதுமக்களுக்கு தடுப்பு ஊசி செலுத்திட நாள் **04–09–2022ல்– 15** (முகாம்) நாள் **11–09–2022ல்– 15** (முகாம்) நாள் **18–09–2022ல்– 15** (முகாம்) மற்றும் **25.09.202ல்** அமைக்கப்பட்டு காலை **7.00** மணியிலிருந்து மாலை **7.00** மணி வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ள அதன் களப்பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மாலை சாப்பாடு கீழ் கண்ட நாட்களில் வழங்கப்பட்டுள்ளது அதற்கான செலவினம் தொகை கீழ் கண்ட விவரப்படி விருதுநகர் ஜெயமணி ஹோட்டல் உரிமையாளருக்கு வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | விநியோகம் செய்யப்பட்ட உணவு வகைகள் விவரம் | நபர்கள் விவரம் | பில் நாள் | தொகை ரூபாய் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | காலை டிபன், டீ, வடை, மதிய உணவு, மற்றும் மாலை டீ, வடை, இரு வேளை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) | **110** | **05.09.2022** | **15884.00** |
| 2 | காலை டிபன், டீ, வடை, மதிய உணவு, மற்றும் மாலை டீ, வடை, இரு வேளை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) | **130** | **12.09.2022** | **18772.00** |
| 3 | காலை டிபன், டீ, வடை, மதிய உணவு, மற்றும் மாலை டீ, வடை, இரு வேளை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) | **130** | **19.09.202** | **18772.00** |
| 4 | காலை டிபன், டீ, வடை, மதிய உணவு, மற்றும் மாலை டீ, வடை, இரு வேளை தண்ணீர் பாட்டில் (1லிட்டர்) | **130** | **26.09.2022** | **18772.00** |

__அலுவலககுறிப்பு__ .   மன்றம் அனுமதி வழங்கலாம்.
நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்**04.09.2022** மற்றும் **26.09.2022**ல் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.4518/2021/எச்1

**தீர்மானம் எண்.219**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :15

விருதுநகர் நகராட்சியின் பொதுசுகாதராப் பிரிவில் **36** வார்டுகளுக்குப்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளான வீடுகள் தோறும் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், அபேட் மருந்து தெளித்தல், புகை மருந்து அடித்தல் போன்ற டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள், டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு **300** வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இந்நகராட்சியில் உள்ள **25948** வீடுகளுக்கு **86** கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இணை இயக்குநர், சுகாதரா பணிகள் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். இந்நகராட்சியில் நிதி நிலை கருத்தில் கொண்டு தற்போது **64** கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண் **15** நாள் **29.03.2022** - ன் படி அனுமதிக்கப்பட்டு திருவாளர் ஆதவன் மகளிர் சுய உதவி குழு, விருதுநகர் மூலம் பணிகள் செய்யப்பட்டு **30.09.2022** ல் முடிவடைகிறது. பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதியும் தற்போது பருவமழைக்காலம் தொடங்கி விட இருப்பதினால் மேற்காணும் சுய உதவி குழு மூலம் **01.10.2022** முதல் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ஊதியம் தொகையாக ரூ**458/–** வீதம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி தரவிலை விகிதத்தில் **31.08.2023** வரை ஊதியம் தொகையாக ரூ **97.00** இலட்சம் ஆகும். பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

__அலுவலக குறிப்பு.__   மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.10318 /2022/எச்1)

**தீர்மானம் எண்.220**: அனுமதிக்கப்பட்டது

## பொருள் :16

விருதுநகர் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 27இல் நாராயணமடம் தெருவில் (ஏற்கனவே உள்ள அங்கன்வாடி மையம் கட்டிடத்தை இடித்துவிட்டு) புதிய அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.9.80/- இலட்சம் மதிப்பீடு செலவினங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-2022 ஆண்டு நிதியில் மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சியரின் ந.க.சி3/5991/2021 நாள்.12.05.2022 ன் செயல்முறை ஆணை படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 27.09.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன, அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.D.C.சக்கரைகனி,விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.03 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு.K.செல்வராஜ்,விருதுநகர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.18 சதவிகிதம் அதிகம். |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் 0.03% குறைவாக அளித்துள்ள திரு.D.C.சக்கரைகனி விருதுநகர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

இ1/1139-6/2022

**தீர்மானம் எண்.221:** அனுமதிக்கப்பட்டது

நகர்மன்ற தலைவர்
விருதுநகர் நகராட்சி